செ.வெ.எண்:28/2019 நாள்:09.08.2019

## திண்டுக்கல் மாவட்டம்

# பத்திரிக்கைச்செய்தி

---

மதுரை கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநர் அலுவலக நிர்வாகத்தின் கீழ் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் இயங்கி வரும் அரசு கள்ளர் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் பணிபுரிந்து வரும் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் கணினி பயிற்றுநர்கள்/காப்பாளர் /காப்பாணினிகளுக்கு 2019-20-ஆம் கல்வியாண்டில் நடைபெற வேண்டிய பொதுமாறுதல் மற்றும் பதவி உயர்வு கலந்தாய்வானது எதிர்வரும் 05.09.2019 மற்றும் 06.09.2019 ஆகிய இரு நாட்களில் மதுரை மாவட்டம், செக்கானூரணி, அரசு கள்ளர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற உள்ளது.

05.09.2019 அன்று காலை 10.30 மணி முதல் மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் மாறுதல் மற்றும் பதவி உயாவு, உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் மாறுதல் மற்றும் பதவி உயர்வு, முதுகலைப்பட்டதாரி ஆசிரியர் மாறுதல் மற்றும் பதவி உயர்வு, நடுநிலைப்பள்ளித் தலைமையாசிரியர் மாறுதல் மற்றும் பதவி உயர்வு, தமிழாசிரியர் மாறுதல், பட்டதாரி ஆசிரியர் /கணினி பயிற்றுநர் /காப்பாளர் /காப்பாளினி மாறுதல் மற்றும் சிறப்பு ஆசிரியர்களுக்கான மாறுதல் கலந்தாய்வும் நடைபெற உள்ளது.

06.09.2019 அன்று காலை 10.30 மணி முதல் தொடக்கப்பள்ளித் தலைமையாசிரியர் மாறுதல் மற்றும் பதவி உயர்வும், இடைநிலை ஆசிரியர் (1 முதல் 5-ஆம் வகுப்பு) இடைநிலைக் காப்பாளர் /காப்பாளினி மாறுதலும் நடைபெற உள்ளது.

எனவே, முன்னுரிமையில் உள்ளவர்கள் உரிய விண்ணப்பத்துடன் தக்க சான்றுகளை இணைத்து 21.08.2019 அன்று மாலை 5.00 மணிக்குள் விண்ணப்பிக்கும்பட்சத்தில் அதற்குரிய முன்னுரிமை வழங்கப்படும். அதற்குப் பின்னர் வரும் மனுக்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ள இயலாது என மதுரை கள்ளர் சீரமைப்பு இணை இயக்குநர் திரு.வை.குமார் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**